**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 81/ 2023 PW.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | அபைய் பிரகாஷ் | த–பெ | பிமோத்குமார் |
| ஊர்: | : | ராஜபாளையம் | சமயம்: | |
| வயது: | : | 28 /2024 | வட்டம்: | |
| தொழில்: | : | உதவி மேலாளர். | மாவட்டம் | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.09.2024

----------------------------------------------------------------------------------------------------

05.09.2024

**முதல் விசாரணை :**

1) எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. **அழைப்பாணையில் கேட்கப்பட்டிருந்த காசோலை எண் 347287, காசோலைக்குறிய stop payment குறித்த வங்கி கணக்குபட்டியல் ம.சா.ஆ.34 ஆகும். காசோலை எண்கள் 625997, 625998 காசோலைகளுக்குறிய stop payment குறித்த வங்கி கணக்குபட்டியல் ம.சா.ஆ.35 ஆகும். காசோலை எண் 010439 காசோலைக்குறிய stop payment குறித்த வங்கி கணக்குபட்டியல்கள் ம.சா.ஆ.36 ஆகும்.** ம.சா.ஆ. 16 முதல் ம.சா.ஆ. 19 வரையான காசோலை எங்கள் வங்கியில் இருந்து வழங்கப்பட்டது. ம.சா.ஆ. 20 முதல் 23 வரையான காசோலைகள் 13.01.2023 தேதியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டபோது போதிய தொகை இல்லை என்ற காரணம் கண்டு திருப்பப்பட்டது என்றால் சரிதான். ம.சா.ஆ. 24 முதல் 27 வரையான ஆவணங்கள் payment stopped என்ற காரணம் கண்டு திருப்பப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் அனைத்தும் 15.02.2023 ல் வழங்கப்பட்டது. ம.சா.ஆ. 24 முதல் 27 வரையான ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன்பாக 11.01.2022 அன்று stop payment கொடுக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பாக ம.சா.ஆ, 25 மெமோ எங்கள் வங்கியில் account closed என்ற காரணம் கண்டு 19.01.2021 அன்று காசோலை எண் 010439 ற்கு வழங்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் வங்கியில் இருப்பு தொகை ஏதும் இல்லை.

2) ம.சா.ஆ. 24 முதல் ம.சா.ஆ.27 வரை 15.02.2023 அன்று காசோலை எண் 347287 stop payment என்ற காரணம் கண்டு திருப்பப்பட்டபோது வங்கி இருப்பு தொகை ஏதும் இல்லை. அதுபோல் காசோலை எண்கள் 625997, 625998 என்ற எண்ணிற்குரிய காசோலைகள் தொடர்பாக 12.01.2022ல் stop payment கொடுக்கப்பட்டபோது அவரது வங்கி கணக்கில் 18 ஆயிரத்து 538 இருப்பில் இருந்தது. மேலும் காசோலை எண் 010439 என்ற காசோலைக்குறிய வங்கி கணக்கு 19.01.2021ல் முடிக்கப்பட்டுள்ளது. அதற்கு stop payment கொடுக்கபடவில்லை. ம.சா.ஆ. 13, மற்றும் ம.சா.ஆ.15 ஆவணங்கள் வங்கியில் வழங்கப்பட்ட கணினி பதிவிறக்க நகல்கள் ஆகும். அவற்றிற்கு வங்கியின் முத்திரையும் கையொப்பம் அவசியம் இல்லை என்றால் சரிதான்.

<u>குறுக்குவிசாரணை</u>

1) 347287 காசோலைக்குறிய காசோலை புத்தகம் எப்போது வழங்கப்பட்டது என்றால் ஆவணங்களை பார்த்துதான் சொல்லமுடியும். அதுபோலவே 625997, 625998, 010439 காசோலைகளுக்கு உரிய காசோலை புத்தகங்கள் எப்போது வழங்கப்பட்டது என்றால் ஆவணங்களை பார்த்துதான் சொல்லமுடியும். 010439 என்ற காசோலைக்குறிய வங்கி கணக்கு கணக்கு உரிமையாளரின் கோரிக்கையின்படி முடிக்கப்பட்டது. மேற்படி வங்கி கணக்கு அந்நிறுவனத்தின் Authorised Signatory –ல் முடிக்கப்பட்டிருக்கும் அது யார் என்று ஆவணங்களை பார்த்துதான் சொல்லமுடியும். மேற்படி காசோலைகளுக்கு எப்போது stop payment கொடுக்கப்பட்டது அதற்கு தொகை பிடித்தம் செய்யப்பட்டதுபோன்ற விபரங்கள் அடங்கிய வங்கி கணக்கு பட்டியலை நான் தாக்கல் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்திருக்கும் கணிணிபதிவிறக்க நகல் ஆவணங்கள் இந்திய சாட்சிய சட்டப்படி ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's)**
**விரைவு நீதிபதி காரைக்குடி**